**MINUTES OF THE PUBLIC HEARING MEETING CONDUCTED FOR OBTAINING ENVIRONMENTAL CLEARANCE FOR THE ROUGH STONE QUARRY OF M/S.ELANGOVAN STONE CRUSHER, S.F.NO.27/1A (BLOCK-3), ELAMBALUR VILLAGE, PERAMBALUR TALUK, PERAMBALUR DISTRICT OVER AN EXTENT OF 2.50.0 HECTARES AT M/s. MAHALAKSHMI MAHAL, NEAR GRAND SUPER MARKET,ELAMBALUR ROAD, PERAMBALUR DISTRICT ON 26.02.2026.**

**PRESIDING OFFICERS:**

| | | | |
|---|---|---|---|
| 1. | Thiru.S.Sornaraj | : | Personal Assistant to the District Collector (General)/ Deputy Collector, Perambalur District. |
| 2. | Tmt. S. Vijaya Priya | : | District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Perambalur District. |
| **PROPRIETOR:** | | | |
| 3. | Thiru.P.Elangovan | | **Project :** Rough Stone Quarry of M/s. Elangovan Stone Crusher, S.F.No.27/1A (Block-3), Elambalur Village, Perambalur Taluk, Perambalur District |

The total number of people who attended the meeting, including the Proprietor of the quarry, Government Officials, Environmental Activists and the General Public, was 180. (Copy of the attendance register is attached herewith).

**District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Perambalur,** Good morning to everyone. I extend a warm welcome, on behalf of the Tamil Nadu Pollution Control Board and the Perambalur District Administration, to the Sub-Collector of Perambalur District who has presided over this public hearing meeting for the proposed Rough Stone Quarry of M/s. Elangovan Stone Crusher, S.F.No.27/1A (Block-3) with a total extent of 2.50.0 hectares at Elambalur Village,Perambalur Taluk,Perambalur District. I also welcome all other Government officials, Members of the Public, Volunteers, Police officials, and friends from the Press and Media who have gathered here. Since the proposed project

falls within a 6.30.0 hectare quarry cluster area, this meeting is being conducted to obtain Environmental Clearance from the State Environmental Impact Assessment Authority for the establishment of the rough stone quarry. Regarding today's public hearing, advance public notices were published 30 days prior, on 24.01.2026, in the English daily newspaper "The New Indian Express" and the Tamil daily newspaper "Dinathanthi". Further, in order to inform the residents of Elambalur Village about the public hearing, pamphlets were distributed and announcements were made through loudspeakers in Elambalur Village and the surrounding areas. The Environmental Advisor of the project will now present a detailed explanation of the proposed project. Thereafter, members of the public may individually express their opinions by stating their name and address before recording their opinions. All opinions expressed by the public will be recorded in both audio and video formats and forwarded to the State Environmental Impact Assessment Authority. Now, the Environmental Advisor will explain about the project.

**Project Environmental Advisor**:

The project consultant explained the project to the public through a Power Point Presentation.

**District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Perambalur** requested the public to state their name and village before expressing their opinions.

**District Deputy Collector:** requested that those who wish to express their opinions should first register their name and mobile number and then come forward to present their views. He also informed that if anyone had petitions, they could submit them in writing.

1. **Thiru. Palanisamy, Thanneerpandal:**

   I am working as a compressor operator in a stone quarry. Since the proposed quarry will be located nearby, it will be easier for me to travel to work. As my transportation expenses will also be reduced, I would like to state that the establishment of the quarry will not cause any inconvenience to me.

2. **Thiru. Arokiyam, Samathuvapuram, Elambalur:**

   I am working as a tipper lorry operator in a stone quarry. I have four children. Working in the stone quarry is convenient for me. Therefore, if the quarry is established, it will be helpful to me.

**3. Thiru.Veeramurugan, Samathuvapuram:**

I am from another place and have been living here for five years. If the quarry is established, it will be convenient for me. I am unable to travel long distances for work. I have three children. Therefore, if the quarry comes here, it will be very convenient, and it will be easier for me to work near my home.

**4. Thiru.Sakthivel, Kurumbalur:**

I am a driver. The quarry is located near our area. I have recently joined as a driver. If the quarry is established, it will be easier for us.

**5. Thiru.Kumar, Poclain Operator:**

I am currently working in Chennai. If I go to work in other places, it takes about two months to visit my family. If the quarry is established here, it will be very convenient for me.

**6. Thiru Duraimoorthy, Vadakkumadhavi Road, Kudikadu:**

Greetings to everyone. The establishment of the quarry at Elambalur will be helpful to us. The livelihood of the people in Perambalur District depends on the quarries operating here. Therefore, if the quarry is established, not only will my livelihood improve, but my family members who depend on me will also benefit. Thank you.

**District Deputy Collector:** requested that the public register their name, village, and mobile number. He asked the speakers to use the microphone properly and speak clearly and loudly while expressing their views. He further stated that everyone may express their opinions and requested that any written petitions be submitted at that time.

**District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Perambalur,** invited the public to come forward and express their views.

**7. Tmt. Thangamani, Perambalur:**

Greetings to everyone. If the stone quarry is established, it will be beneficial for the public. It will be convenient to send children to school. She requested that any concerns be conveyed to the concerned authorities. Thank you.

**District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Perambalur,** once again requested the public to come forward without delay to express their views.

**8. Thiru. Palanisamy, Elambalur:**

If the quarry is established, there will be more employment opportunities for everyone. Therefore, we welcome the establishment of the quarry.

**9. Tmt. Vasantha, Erikkarai, Elambalur:**

Greetings to everyone. My husband is a driver. If the stone quarry is established, it will be very beneficial.

**10. Tmt. Manikodi, Elambalur:**

Greetings to everyone. If the stone quarry is established, it will be good for my family.

**11. Thiru Govindaraj, Elambalur:**

I am a driver. I am happy about the establishment of the stone quarry. He requested that drivers operate their vehicles carefully and patiently, especially during school hours.

**District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Perambalur,** invited the public to come forward and express their views. She stated that all opinions expressed during the meeting would be recorded and requested that any petitions, if available, be submitted.

**District Deputy Collector:** stated that if there were no further comments from the public, the public hearing meeting could be concluded. He informed that sufficient opportunity had been given to everyone and that opinions could be expressed either in person or in writing. He also requested that any petitions be submitted. Since no one else from the public came forward to express their views, the public hearing meeting was concluded with the consent of the public.

**Enclosures:**

1. Copy of attendance register of Public hearing (16 pages - 180 members)
2. Project summary Presentation
3. Copy of petitions received during Public hearing- 01 No
4. Video recording of public hearing Pendrive.

04/3/26

**District Environmental Engineer,**
**Tamil Nadu Pollution Control Board,**
**Perambalur**

**Personal Assistant to Collector**
**(General)/Deputy Collector,**
**Perambalur**

(3/3)

**பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் வட்டம், எளம்பலூர் கிராமம், தி/ள். இளங்கோவன் ஸ்டோன் கிரஷர், புல எண். 27/1A (தொகுதி-3), மொத்த பரப்பளவுகளான 2.50.0 ஹெக்டேரில் அமையவுள்ள சாதாரணக் கல் குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவதற்காக பெரம்பலூர் மாவட்டம், எளம்பலூர் சாலை, கிராண்ட் சூப்பர் மார்க்கெட் அருகில் அமைந்துள்ள தி/ள்.மகாலட்சுமி மஹாலில் 26.02.2026 அன்று நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கைகள்.**

**தலைமை அதிகாரிகள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. எஸ்.சொர்ணராஜ் | : | மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது)/துணை ஆட்சியர் பெரம்பலூர் மாவட்டம். |
| 2. | திருமதி. சு. விஜய பிரியா | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், பெரம்பலூர். |
| **நிறுவனத்தினர்** | | | |
| 3. | உரிமையாளர்<br>திரு. P. இளங்கோவன் | : | **திட்டம்-1**<br>திரு. இளங்கோவன் ஸ்டோன் கிரஷர் அவர்களின் சாதாரணக் கல் குவாரி, புல எண். 27/1A (தொகுதி - 3), எளம்பலூர் கிராமம், பெரம்பலூர் வட்டம், பெரம்பலூர் மாவட்டம். |

இக்கூட்டத்தில் கலந்துகொண்ட நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர், அரசு அலுவலர்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மற்றும் பொது மக்களின் மொத்த எண்ணிக்கை 180 ஆகும். (வருகைப் பதிவேட்டின் நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது).

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், பெரம்பலூர்** அவர்கள்,

அனைவருக்கும் இனிய காலை வணக்கம், பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் வட்டம், எளம்பலூர் கிராமத்தில் தி/ள். இளங்கோவன் ஸ்டோன் கிரஷர் அவர்களின் சாதாரணக் கல்குவாரி, புல எண்: 27/1A (தொகுதி-3), மொத்த பரப்பளவு 2.50.0 ஹெக்டேரில் அமையவுள்ள சாதாரணக் கல் குவாரிக்கான பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு தலைமையேற்று நடத்தித்தர வருகைபுரிந்துள்ள பெரம்பலூர் மாவட்ட துணை ஆட்சியர் அவர்களையும் ஏனைய அரசுத்துறை

அதிகாரிகளையும், பொதுமக்களையும், தன்னார்வளர்களையும், காவல் துறை அதிகாரிகள், பத்திரிக்கை மற்றும் ஊடகத்துறை நண்பர்கள் அனைவரையும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சார்பாகவும், பெரம்பலூர் மாவட்ட நிர்வாகத்தின் சார்பாகவும் வருக வருக என்று வரவேற்கின்றேன்.

முன்மொழியப்பட்ட இத்திட்டம் 6.30.0 ஹெக்டேர் குவாரி குழுமத்திற்குள் அமைவதால் கல்குவாரி அமைப்பதற்கு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திடமிருந்து சுற்றுச்சூழல் அனுமதி பெரும் பொருட்டு இக்கூட்டமானது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது, இன்று நடைபெற்று கொண்டிருக்கும் கூட்டம் குறித்து 24.01.2026 தேதியிட்ட "தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆங்கில நாளிதழ் மற்றும் தினத்தந்தி தமிழ்" செய்தித்தாள் ஆகியவற்றில் 30 நாட்களுக்கு முன்னதாகவே பத்திரிக்கை செய்தி வெளியீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் குறித்து எளம்பலூர் கிராமத்தில் வசிக்கும் பொதுமக்கள் தெரிந்துகொள்ளும் வகையில் எளம்பலூர் கிராமம் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் துண்டு பிரசுரங்கள் மற்றும் ஒலிப்பெருக்கி மூலம் ஏற்கனவே விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. முன்மொழியப்பட்ட இத்திட்டம் குறித்து திட்ட சுற்றுச்சூழல் ஆலோசகர் அவர்கள் விரிவாக எடுத்துரைப்பார்கள். அதன் பின்னர் பொது மக்கள் ஒவ்வொருவராக தங்களுடைய பெயர் மற்றும் முகவரியை தெரிவித்துவிட்டு தங்களுடைய கருத்துக்களை பதிவு செய்யலாம். அவ்வாறு பதிவு செய்யப்படும் பொதுமக்களின் கருத்துக்கள் அனைத்தும் ஒலி மற்றும் ஒளி வடிவில் பதிவு செய்யப்பட்டு, மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பிவைக்கப்படும். தற்போது சுற்றுச்சூழல் ஆலோசகர் அவர்கள் திட்ட விளக்கம் குறித்து எடுத்துரைப்பார்கள். நன்றி.

**திட்ட ஆலோசகர்** : அவர்கள் இத்திட்டம் குறித்த விளக்கங்களை நிழற்படம் (Power Point Presentation) மூலம் பொதுமக்களுக்கு விளக்கினார்.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், பெரம்பலூர்** அவர்கள், பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை தெரிவிக்கும் முன்னர் தங்களது பெயர் மற்றும் ஊர் விவரங்களை தெரிவித்துவிட்டு கருத்துக்களை பதிவு செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

**மாவட்ட துணை ஆட்சியர்** அவர்கள், கருத்து தெரிவிப்போர் தங்களுடைய பெயர் மற்றும் அலைபேசி எண் ஆகியவற்றை பதிவு செய்துவிட்டு முன் வந்து கருத்துக்களை தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார். மேலும் மனுக்கள் இருந்தால் எழுத்து மூலமாக எழுதி கொடுக்கலாம் எனக் கேட்டுக்கொண்டார்.

1. **திரு. பழனிச்சாமி, தண்ணீர்பந்தல் :**

நான் கல்குவாரியில் கம்ப்ரஸர் ஆபரேட்டராக பணிபுரிந்து வருகின்றேன். பக்கத்தில் குவாரி அமைவதால் எனக்கு வேலைக்கு செல்வது எளிதாக இருக்கும். மேலும் போக்குவரத்து செலவு குறைவதால் குவாரி வருவது எனக்கு பாதிப்பு இல்லை என தெரிவித்துக் கொள்கின்றேன்.

2. **திரு. ஆரோக்கியம், சமத்துவபுரம், எளம்பலூர்**

நான் கல்குவாரியில் டிப்பர் லாரி ஆபரேட்டராக பணிபுரிந்து வருகின்றேன். எனக்கு பிள்ளைகள் 4 நபர்கள் உள்ளனர். கல்குவாரி வேலை செய்வது எனக்கு சவுகரியமாக உள்ளது. அதனால் கல்குவாரி வந்தால் உதவியாக இருக்கும் என தெரிவித்தார்.

3. **திரு.வீரமுருகன், சமத்துவபுரம்**

நான் வெளியூர். இங்கு வந்து ஐந்து ஆண்டுகள் ஆகிறது. எனக்கு குவாரி வந்தால் வசதியாக இருக்கும். நான் ரொம்ப தொலைவில் சென்று வேலை செய்ய முடியவில்லை. எனக்கு 3 குழந்தைகள் உள்ளனர். அதனால் குவாரி வந்தால் மிக வசதியாகவும் வீட்டில் பக்கத்தில் வேலை செய்வதில் எளிதாகவும் இருக்கும் என தெரிவித்தார்.

4. **திரு.சக்திவேல், குரும்பலூர் :**

நான் ஒரு ஓட்டுநர். எங்களுக்கு குவாரி பக்கமாக இருக்கின்றது. நான் ஓட்டுநராக புதிதாக சேர்ந்துள்ளேன். குவாரி வந்தால் எங்களுக்கு எளிதாக இருக்கும் என தெரிவித்தார்.

5. **திரு.குமார், பொக்லைன் ஆபரேட்டர்**

நான் சென்னையில் வேலை செய்து வருகின்றேன். வெளியூர் சென்றால் வீட்டில் உள்ளவர்களை பார்க்க இரண்டு மாதம் ஆகும். இங்கு குவாரி வந்தால் மிகவும் சவுகரியமாக இருக்கும் என தெரிவித்தார்.

6. **திரு.துரைமூர்த்தி, வடக்கு மாதவி சாலை, குடிக்காடு** :

அனைவருக்கும் வணக்கம். எளம்பலூரில் குவாரி வருவதால் எங்களுக்கு உதவியாக இருக்கும். எங்களுடைய (பெரம்பலூர் மாவட்டத்தின்) வாழ்வாதாரமே இங்கு செயல்படும் குவாரியை நம்பிதான் உள்ளது. அதனால் குவாரி வந்தால் என்னுடைய வாழ்வாதாரம் மட்டுமில்லாமல் என்னை நம்பியுள்ள என்னுடைய குடும்ப உறுப்பினர்களும் பயன் பெறுவார்கள் என கூறிக் கொண்டு விடைபெறுகின்றேன். நன்றி வணக்கம்.

**மாவட்ட துணை ஆட்சியர்** : அவர்கள் , பொதுமக்களின் பெயர், ஊர், அலைபேசி எண் ஆகியவற்றை பதிவு செய்யுமாறு கேட்டுக்கொண்டார். பொதுமக்கள் கருத்து தெரிவிக்குபொழுது ஒலிவாங்கியை அருகில் வைத்து தெளிவாகவும், சத்தமாகவும் பேசுமாறு கேட்டுக்கொண்டார். மேலும், அனைவரும் கருத்துக்களை தெரிவிக்கலாம் என கூறினார். மனு இருந்தால் தற்பொழுது சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், பெரம்பலூர்** அவர்கள்,

பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை தெரிவிக்க முன் வரலாம் எனக் கேட்டுக்கொண்டார்.

7. **திருமதி.தங்கமணி, பெரம்பலூர்** :

அனைவருக்கும் வணக்கம். கல்குவாரி வந்தால் பொதுமக்கள் அனைவருக்கும் நன்றாக இருக்கும். பிள்ளைகளை பள்ளியில் விட வசதியாக இருக்கும். உங்கள் வேண்டுக்கோள் எதுவாயினும் அய்யா அவர்களிடம் தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார். நன்றி.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், பெரம்பலூர்** அவர்கள்,

பொதுமக்கள் காலம் தாழ்த்தாமால் தங்களுடைய கருத்துக்களை தெரிவிக்க முன் வரலாம் எனக் கேட்டுக்கொண்டார்.

**8. திரு.பழனிசாமி, எளம்பலூர்**

குவாரி வந்தால் எல்லோர்க்கும் வேலை வாய்ப்பு அதிகமாக இருக்கும். அதனால் குவாரி வருவதை வரவேற்கிறோம் எனத் தெரிவித்தால்.

**9. திருமதி. வசந்தா, ஏரிக்கரை, எளம்பலூர்**

அனைவருக்கும் வணக்கம். எனது கணவர் ஓட்டுநராக உள்ளார். கல்குவாரி வந்தால் மிகவும் நல்லதாக இருக்கும் என தெரிவித்தார்.

**10. திருமதி. மணிக்கொடி, எளம்பலூர்**

அனைவருக்கும் வணக்கம். கல்குவாரி வந்தால் எனது குடும்பத்திற்கு நன்றாக இருக்கும் எனத் தெரிவித்தால்.

**11. திரு. கோவிந்தராஜ், எளம்பலூர்**

நான் ஒரு ஓட்டுநராக உள்ளேன். கல்குவாரி வருவதால் எனக்கு சந்தோஷம் தான். பள்ளி நேரங்களில் ஓட்டுனர்கள் வாகனங்களை கவனமாகவும், பொறுமையாகவும் வருமாறு கேட்டுக்கொண்டார்.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், பெரம்பலூர்** அவர்கள், பொதுமக்கள் கருத்துக்களை தெரிவிக்க முன்வரலாம். இங்கு தெரிவிக்கப்படும் அனைத்து கருத்துகளும் பதிவு செய்யப்படும். மனுக்கள் ஏதும் இருந்தால் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

**மாவட்ட துணை ஆட்சியர்:** பொதுமக்களுக்கு கருத்துகள் வேறு ஏதுமில்லை என்றால் கருத்துக் கேட்பு கூட்டத்தை இத்துடன் நிறைவு செய்து கொள்ளலாம். நாங்கள் தங்களுக்கு போதுமான அளவு சந்தர்ப்பம் தந்துள்ளோம். உங்களுடைய கருத்துகளை நேரிலோ அல்லது எழுத்து

மூலமாகவோ தெரிவிக்கலாம். மனுக்கள் ஏதும் இருந்தால் சமர்ப்பிக்கலாம். பொதுமக்கள் எவரும் கருத்துகள் கூற முன்வராததால் பொதுமக்கள் சம்மதத்துடன் இந்த கருத்துக் கேட்பு கூட்டத்தை இத்துடன் நிறைவு செய்ய உள்ளோம். நன்றி வணக்கம்.

இணைப்பு :

1. பொது மக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்தில் கலந்து கொண்டோரின் பெயர் பட்டியல் (16 பக்கங்கள்: 180 நபர்கள்)
2. திட்ட உரை விளக்கக்காட்சி
3. பொது மக்களின் கருத்துக் கேட்புக் கூட்டம் தொடர்பாக பெறப்பட்ட மனு - 01.
4. பொது மக்கள் கருத்துக் கேட்புக் கூட்ட ஒளிப்பதிவு குறும்பதிவி.

04/3/26

மாவட்டசுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
பெரம்பலூர்

5.3.26

மாவட்ட ஆட்சியர் நேர்முக
உதவியாளர் (பொது)/துணை ஆட்சியர்,
பெரம்பலூர் மாவட்டம்.

(2/3)